**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**
**SESSIONS CASE NO. 112/2018**

**01.12.2021 அ.சா.1 மணிமேகலை - சத்திய பிரமாணத்தின் பேரில் மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1வது எதிரி என் கணவரை என்றைக்காவது கொன்று விடுவார் என்று என்னுடைய புகாரிலிலோ, போலீஸ் விசாரணையிலோ நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் கணவரை பல அடிகள் அடித்தார்கள் என்ற விவரத்தை நான் குறிப்பிட்டு என்னுடைய புகாரிலிலோ, போலீஸ் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. 16.12.2015ந் தேதி என் கணவர் செல்வத்திற்கு இடையேயும், 1ம் எதிரி, பொன்னுசாமி, ராமசாமி கவுண்டர், பச்சையம்மாள், மல்லிகா, ரங்கசாமி மற்றும் ரங்கநாதன் இடையே பாகம் ஏற்பட்டு பாகத் தேதியில் இருந்து அவரவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அந்தந்த பாகஸ்தர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பத்திரம் கீழ்பென்னாத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் எங்களுக்குள் அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டு வந்தது. அனைத்து பாகஸ்தர்களையும் ஒப்புதல் பெற்று தான் பாகம் பிரித்து பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் வீட்டுகாரர் ஒத்துக்கொள்ளவில்லை. பாகப் பத்திரம் பதிவு செய்யும் போது நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவில்லை. என் கணவரும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவில்லை. காட்டப்படும் பாகப்பிரிவினை பத்திரத்தில் என் கணவர் மற்றும் மேற்சொன்ன அனைத்து பாகஸ்தர்களின் போட்டோ ஒட்டப்பட்டு உள்ளது என்றும், என் கணவரின் கையெழுத்தும் இடம் பெற்றுள்ளது என்று சொன்னால் சரிதான். என் கணவர் அடிப்பட்டவுடன் ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு பிறகு கீழ்பென்னாத்தூர் வந்து விட்டு பின்னர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அடிப்பட்டவுடன் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கும், பின்னிட்டு வேலூருக்கும் அதன் பின்னிட்டு சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் அன்றைய தினமே சேர்த்து விட்டேன். அப்போது காலை மணி 1 அல்லது 2 இருக்கலாம். என் கணவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு உள்நோயாளியாக சேர்க்கப்பட்டார். என்னுடன் என் சகோதரர்கள் அ.சா.4 மற்றும் மாசிலாமணி மருத்துவமனையில் இருந்தார்கள். என் கணவர் மருத்துவமனையில் இருக்கும்போதே 27ந் தேதி நான் கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்துவிட்டு நான் மறுபடியும் சென்னைக்கு என் கணவரை பார்ப்பதற்காக சென்றுவிட்டேன். 28ந் தேதி பகல் 12 மணியளவில் என் கணவர் இறந்து விட்டதாக தெரிவித்தார்கள். நானும் என் சகோதரர் அருள் சுந்தரபாண்டியனும் காலை சென்னை மருத்துவமனையில் இருந்து புறப்பட்டு நேராக கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்திற்கு வந்தோம். புகாரை நான் தான் எழுதினேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் நான் அதனை கைப்பட எழுதினேன். சிறுநாத்தூர் கிராமத்தில் இருந்து கீழ்பென்னாத்தூர் காவல் நிலையம் 2 மைல் தூரம். சொத்து சம்மந்தமாக சிவில் வழக்கு தாக்கல் செய்யவில்லை. புகாரை தவிர அதற்கு முன்னர் நான் எந்த புகாரோ, விண்ணப்பமோ எந்த அலுவலகத்திலும் நான் கொடுத்ததில்லை. என் அண்ணன் அருள் சுந்தர பாண்டியன் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். என் அண்ணன் சொன்னதின் பேரில் தான் நான்

கீழ்பென்னாத்தூர் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன் என்ற சங்கதி புகாரில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறான சங்கதி என்னால் புகாரில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். என் கணவர் எப்போதாவது குடிப்பார். அன்றைய தேதியில் அவர் குடித்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. புகார் கொடுத்த தேதியில் அன்று மாலை 4 மணி வரை நான் காவல் நிலையத்தில் தான் இருந்தேன். அப்போது எதிரிகள் காவல் நிலையத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு எதிரிகள் காவல் நிலையத்தில் இல்லை என்று சாட்சியமளிக்கிறார். என்னுடைய வீட்டிற்கும், எதிரியின் வீட்டிற்கும் இடையே பஞ்சாயத்து குடிநீர் பைப் செல்கிறது என்றால் சம்பவ தேதியில் இல்லை. தற்போது தான் போட்டுள்ளார்கள். சம்பவத்திற்கு முன்பாகவே பஞ்சாயத்து குடிநீர் பைப் போடப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் ஒவ்வொரு வீட்டிலும் பள்ளம் தோண்டப்பட்டு தண்ணீர் பிடிப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரியின் வீடு எங்கள் வீட்டிற்கும் எதிரே 10 அடி தூரத்தில் உள்ளது. தெருவில் நிறைய வீடுகள் உள்ளன. சண்டை என்பது ரோட்டில் நடந்தது என்றால் சரிதான். வீடு பக்கத்தில் உள்ளது. நான் என் கணவரை மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் போது எதிரியும் அங்கு அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றால் சரியல்ல. திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் என் கணவர் 2 மணி நேரம் இருந்தார். திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் நானும் அ.சா.4 மட்டும் தான் இருந்தோம். நான் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் இருந்த போது போலீசார் அங்கு வந்து என்னை விசாரணை செய்தார்கள். சாட்சி பின்னிட்டு அந்தகாலக்கட்டத்தில் அங்கு வைத்து போலீசார் விசாரிக்கவில்லை என்று சாட்சியமளிக்கிறார். என் கணவர் 2ம் எதிரியை அடிக்கவில்லை. ஆனால் 2ம் எதிரியை என் கணவர் அடிக்க போனார். என் கணவர் 2வது எதிரியை எதற்கு 10 செண்டை எழுதி வாங்கிக்கொண்டீர்கள் என்று சண்டை போட்டார். 2வது எதிரி அவர் வீட்டில் இருந்து சண்டை போட்டுக்கொண்டிருந்தார். என் கணவரும் என் வீட்டில் இருந்து சண்டை போட்டார். 2ம் எதிரியும், பார்த்திபனும் மட்டும் தான் வீட்டில் இருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். பிறகு 1ம் எதிரியும் அவர்களோடு இருந்ததாக சாட்சியமளிக்கிறார். என் கணவர் 2ம் எதிரியை அடிக்க முயற்சி செய்த போது பார்த்திபன் தடுக்க முயற்சி செய்தார் என்றால் சரியல்ல. சுமார் 1 மணி நேரம் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் இருந்து ஆம்புலன்ஸில் வேலூர் நாராயணி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அதே ஆம்புலன்சில் வேலூரில் சரியான உபகரணங்கள் இல்லை என்று கூறியதால் சென்னைக்கு அழைத்து சென்றோம். நாங்கள் சென்ற வண்டி அரசாங்க ஆம்புலன்ஸ். வேலூர் நாராயணி மருத்துவமனைக்கு வெளியே 10 நிமிடம் மட்டும் தான் இருந்தோம். அங்கிருந்து நேராக சென்னை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். நான் சென்னையில் இருந்து கீழ்பென்னாத்தூருக்கு காரில் வந்தேன். எங்கள் ஊரைச் சேர்ந்த பழனி என்பவரும் எங்களுடன் மருத்துவமனைக்கு வந்தார். அவரும் எங்களுடன் சென்னை மருத்துவமனையில் இருந்து அதே காரில் எங்களுடன் கீழ்பென்னாத்தூருக்கு வந்தார். அ.சா.4 அருண் சுந்தர பாண்டியன் 9ம் வகுப்பு வரை படித்துள்ளார். டாக்டரிடம் என் கணவரை யார் தாக்கினார்கள் என்ற விவரத்தை நான் தான் சொன்னேன். என் கணவர் பேசும் நிலையில் இல்லை. என் கணவரை எத்தனை நபர்கள் அடித்தார்கள் என்ற விவரத்தையும், என்ன ஆயுதத்தால் அடித்தார்கள் என்ற விவரத்தையும் நான் தான் சொன்னேன். இந்த சம்பவத்தில் கொடுவாள்கத்தி பயன்படுத்தப்படவில்லை. கொடுவாள்கத்தி கொண்டு தாக்கியதாக மருத்துவரிடம்

சொல்லியிருந்தால் அது தவறு. திருவண்ணாமலையில் இருந்து சிறுநாத்தூர் எத்தனை கி.மீட்டர் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடைபெற்ற உடன் அ.சா.4க்கு தெரிவித்து அவர் வந்தஉடன் ஆம்புலன்சுக்கு தெரிவித்து சுமார் 8 மணியளவில் எங்கள் ஊரில் இருந்து புறப்பட்டோம். அந்த 1/2 மணி நேரத்தில் எங்கள் ஊரைச் சேர்ந்த யாரும் வந்து பார்க்கவில்லை. அந்த தெருவில் சுமார் 20 வீடுகள் உள்ளன. எதிரிகளை தவிர அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களுக்கும் எங்களுக்கும் எந்த வித பிரச்சனைகளும் இல்லை. மற்ற வீட்டுக்காரர்கள் இடை இடையே நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். சிறுநாத்தூர் கிராமத்தில் இருந்து அ.சா.4 இருக்கும் ஊரான சியாபூண்டி கிராமத்திற்கு இரு சக்கர வாகனத்தில் சென்றால் சுமார் 1 மணி நேரம் ஆகும். அ.சா.4 க்கு நான் போன் செய்த போது அவர் சியாபூண்டி கிராமத்தில் இருந்தார். அவர் வந்த பின்னர் தான் போன் செய்து ஆம்புலன்ஸஸ் வந்தது. சண்டை நடந்ததாக சொல்லும் ரோடு தார் ரோடு இல்லை. சிமெண்ட் ரோடு. கட்டிடம் கட்ட ரோடில் கற்கள் போடப்பட்டிருந்த பகுதியில் தான் சண்டை நடந்தது. என் கணவரை ரோடில் தள்ளவில்லை. அடித்து போட்டுவிட்டார்கள். 1ம் எதிரி திருவண்ணாமலையில் வேலை செய்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் கணவருக்கும் 2வது எதிரிக்கும் வாய் தகராறு ஏற்பட்டது ஒருவருக்கொருவர் தள்ளிக்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு சண்டை நடந்து கொண்டிருக்கும்போது பார்த்திபன் விளக்குவதற்காக அங்கு ஓடிவந்தார் என்றால் சரியல்ல. அந்த சண்டையை ஊர்க்காரர்கள் மடக்கவில்லை. அப்போது இருட்டாக இருந்தது. மழை பெய்திருந்தது. 9 மணி வரை மழை பெய்துகொண்டிருந்தது. சண்டையும் நடந்தது. மழையும் பெய்துகொண்டிருந்தது. அனைத்து சம்பவங்களும் மழையில் நனைந்துகொண்டு தான் நடந்தது. நிலம் சம்மந்தமாக வருவாய் துறையினரிடமோ, காவல் துறையிடமோ, மணியக்காரர் ஆகியோர்களிடம் நாங்கள் புகார் கொடுத்ததில்லை. நிலம் தகராறு சம்மந்தமாக ஊர் பஞ்சாயத்தும் நடைபெறவில்லை. என் கணவருக்கு விவசாயம் மட்டும் தான் தொழில். திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் என் கணவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அங்கு சுமார் 1 மணி நேரம் இருந்தோம். அன்றைய தினம் என் கணவர் வீட்டிற்கு 6 மணிக்கு வந்தார். அன்றைய தினத்தில் 2ம் எதிரிக்கும், எனக்கும் என் கணவர் வருவதற்கு முன்னர் சண்டை இருந்தது. 10 நிமிடம் தான் எங்களுக்குள் சண்டை நடந்தது. ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டோம். எனக்கு காயம் ஏற்படவில்லை. சாட்சி தற்போது அன்றைய தினத்தன்று அவருக்கும் 2ம் எதிரிக்கும் சண்டை நடக்கவில்லை என்றும், அன்று நடந்த சம்பவத்தின் போது தான் 2ம் எதிரி தன்னை தாக்கியதாக சாட்சியம் அளிக்கிறார். சுமார் 6 மணிக்கு முன்பிருந்தே மழை பெய்துகொண்டிருந்தது. என் கணவர் குடிபோதையில் பல இடங்களில் பிரச்சனை ஏற்பட்டு உடம்பு முழுவதும் காயங்களுடன் தான் வீட்டிற்கு வந்தார் என்றால் சரியல்ல. பார்த்திபன் தடியால் ஒரு அடி அடித்தார். பொன்னுசாமி கருங்கல்லால் மூன்று முறை தலையின் பின்புறம் அடித்தார். அதை தவிர வேறு அடிகள் எதுவும் அடிக்கவில்லை. என் கணவர் குடித்து விட்டு ஊரில் சண்டை போடுவது, அடிப்பது, பணம் பறிப்பது, அடி வாங்குவது இது தான் தொழில் என்று சொன்னால் சரியல்ல. அன்றைய தினம் குடித்துவிட்டு காயங்களுடன் வீட்டிற்கு வந்தார் என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிரியிடம் தகராறு செய்து அவரை தாக்கியும் உள்ளார் என்றும் அதனால் அவருக்கு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாயார் தாக்கப்படுவதை பார்த்த பார்த்திபன் தடுக்க முயற்சி செய்தார் என்று சொன்னால் சரியல்ல. பார்த்திபன் அடித்தார். அந்த தள்ளு முள்ளுவில் என் கணவர் கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பார்த்திபன் தடியால்

அடித்தார். 1ம் எதிரி கருங்கல்லால் அடித்தார். 1ம் எதிரி அந்த இடத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அனைத்து உண்மைகளையும் மறைத்து ஒரு பொய்யான புகாரை எதிரிகள் மீது கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிற்கு வலது புறத்தில் பொன்முடி குடியிருக்கிறார். அதற்கு பக்கத்தில் காலியாக உள்ளது. இடது பக்கம் காலிமனையாக உள்ளது. முதல் விசாரணையிலும், குறுக்கு விசாரணையிலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- மணிமேகலை

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.
## SESSIONS CASE NO. 112/2018

**01.12.2021 அ.சா.3 பழனி - சத்திய பிரமாணத்தின் பேரில் மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

செல்வம் விவசாய வேலை செய்து வந்தார். நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு செல்லும் போது சுமார் 50 பேர் இருந்தார்கள். நான் செல்வத்தை திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கும், பின்னர் வேலூருக்கும், பின்னிட்டு சென்னைக்கு அழைத்து செல்லும் போது உடன் இருந்தேன். செல்வத்திற்கு திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும்போது அ.சா.1 மற்றும் அ.சா4 மும் போலீசார் விசாரணை செய்தார்கள். நாரியமங்கலம் கிராமத்தில் இருந்து கீழ்பென்னாத்தூர் காவல் நிலையம் சுமார் 3 கி.மீட்டர் தூரம் இருக்கும். செல்வம் சுமார் 1 மணி நேரம் அவருடைய வீட்டு திண்ணையில் படுக்க வைக்கப்பட்டிருந்தார். எங்கள் கிராமத்தில் இருந்து சிறுநாத்தூர் கிராமம் வந்தால் திருவண்ணாமலை - திண்டிவனம் பிரதான சாலையை அடையலாம். எங்கள் கிராமத்தில் இருந்து மேற்சொன்ன பிரதான சாலையை அடைய சுமார் 2 கி.மீட்டர் தூரம் இருக்கும். சிறுநாத்தூர் கூட்ரோடில் ஆட்டோ ஸ்டாண்ட் மற்றும் பஸ் ஸ்டாப்பும் உண்டு. சிறுநாத்தூரில் இருந்து சுமார் 1 கி.மீட்டர் தூரத்தில் கீழ்பென்னாத்தூர் பஸ் ஸ்டாண்ட் மற்றும் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். நாரியமங்கலம் கிராமத்தில் இருந்து திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சுமார் 17 கி.மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் நான் அ.சா.1 மற்றும் அ.சா4 உடன் இருந்தோம். நான் மருத்துவமனையில் இருந்த போது 2ம் எதிரியும் அடிப்பட்டு திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தார். அ.சா.1 மற்றும் 2ம் எதிரியையும் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் அன்றைய இரவே போலீசார் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். வேலூர் மருத்துவமனைக்கு இரவு 1 மணிக்கு சென்றோம். கேட்டில் வைத்தே மருத்துவர்கள் பார்த்துவிட்டு இங்கு முடியாது என்று கூறிவிட்டார்கள். அங்கிருந்து சென்னை மருத்துவமனைக்கு 3 1/2 மணியளவில் சென்றுவிட்டோம். நானும் சென்னை மருத்துவமனையில் உடன் இருந்தேன். அ.சா.1, அ.சா.4,

நான் மற்றும் தேவர் என்பவர் சென்னையில் இருந்து காரில் காலை 11 மணிக்கு கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்திற்கு வந்து விட்டோம். போலீசார் கூப்பிட்டுக் கொண்டு இருந்ததால் தான் மேற்சொன்ன நாங்கள் சென்னையில் இருந்து கீழ்பென்னாத்தூர் காவல் நிலையம் வந்தோம். அதன் பின்னிட்டு தான் போலீசார் அவர்களை விசாரணை செய்வதற்காக கூப்பிட்டு சென்றார்கள். நான் உடன் செல்லவில்லை. நான் சென்னையில் இருந்து கீழ்பென்னாத்தூர் சென்று அங்கிருந்து நான் வீட்டிற்கு சென்று விட்டேன். காவல் நிலையம் செல்லவில்லை. செல்வம் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் நான் குடியிருந்து வருகிறேன். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதிக்கு முன்பே பஞ்சாயத்தில் குடிநீர் இணைத்து இருந்தார்கள். ஒவ்வொரு வீட்டிற்கு முன்பும் தண்ணீர் பிடிப்பதற்கு தொட்டி பள்ளம் சுமார் 3 1/2 ஆழம் இருக்கும். சண்டை எப்போது நடந்தது எப்படி நடந்தது என்று எனக்கு தெரியாது. செல்வம் தினமும் மது அருந்துவார். செல்வம் துனிச்சலான ஆள் வம்பு வந்தால் விடமாட்டார்.

ஓம்/- பழனி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.
# SESSIONS CASE NO. 112/2018

**01.12.2021 அ.சா.4 அருண் சுந்தர பாண்டியன் - சத்திய பிரமாணத்தின் பேரில் மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். சியபூண்டி கிராமத்தில் இருந்து நாரியமங்கலம் கிராமம் சுமார் 20 கி.மீட்டர் தூரம் இருக்கும். நான் இருசக்கர வாகனத்தில் சுமார் 8 மணிக்கு மேல் நாரியமங்கலம் கிராமத்திற்கு வந்தேன். 7.45 மணிக்கு எனக்கு தகவல் கிடைத்தது. நான் சென்று பார்த்த போது அங்கு காவல் துறையினர் யாரும் இல்லை. ஊர் ஆட்கள் அங்கு பார்த்துக்கொண்டிருந்தார்கள். நான், அ.சா.1 மற்றும் மாசிலாமணி ஆகியோர் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அதன் பின்னர் பழனி வண்டியில் வந்தார். பழனியும் சென்னைக்கு வந்திருந்தார். சென்னையில் இருந்து காரில் நான், அ.சா.1, அ.சா.3, மற்றும் இருவர் சென்னையில் இருந்து புறப்பட்டோம். திருவண்ணாமலையில் செல்வம் சிகிச்சையில் இருக்கும் போது போலீசார் அ.சா.1 மற்றும் என்னிடமும் விசாரித்தார்கள். அ.சா.1டம் போலீசார் வாக்குமூலம் வாங்கிக்கொண்டு கையெழுத்து பெற்றுக்கொண்டு அனுப்பினார்கள். திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் விசாரித்து வாக்குமூலம் எழுதி போலீசார் கையெழுத்து பெற்றுக் கொண்டார்கள். அதன் பின்னிட்டு தான் நாங்கள் வேலூர் மற்றும் சென்னைக்கு அழைத்து சென்றோம். காலை 8 மணிக்கு சென்னையில் இருந்து கீழ்பென்னாத்தூர் வருவதற்காக காரில் புறப்பட்டோம். சுமார் 11.30 மணியளவில் கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்திற்கு வந்தோம். எதிரிகள் என் மச்சானின் சகோதரர் என்ற முறையில் தெரியும். காவல் நிலையத்தில் அப்போது எதிரிகளும் அவரது மகனும் இருந்தார்கள் என்றால் நான் பார்க்கவில்லை. அ.சா.1 தொலைபேசியில் எனக்கு தகவல் சொன்னார். நடந்த உண்மைகளை மறைத்து அ.சா.1 தவறான சங்கதிகளை என்னிடம் கூறியுள்ளார் என்றால் சரியல்ல.

ஒம்/- அருண் சுந்தர பாண்டியன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.